


ஜமாலியன் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்
இதழ் 7 சுற்று 2 | JAMALIAN TIMES | மார்ச், 2023




### திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

# நபிகள் நாயகத்தின் பிறப்பின் சிறப்பைக் கொண்டாடும் மீலாதுந்நபி விழா










திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் 07–03–2023 அன்று நபிகள் நாயகத்தின் பிறப்பின் சிறப்பைக் கொண்டாடும் மீலாதுந்நபி விழா முற்பகலில் ஆடவருக்கும் பிற்பகலில் மகளிருக்கும் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியின் மனித மேம்பாட்டு மையம் இந்நிகழ்வை ஒருங்கிணைத்த இந்நிகழ்வில் பேராசிரியர் மு. அப்துல் சமது, மேனாள் தமிழ்த் துறைத்தலைவர், ஹாஜி கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரி, உத்தமபாளையம் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார்.

இந்நிகழ்விற்கு கல்லூரியின் தலைவர் ஹாஜி M.J. ஜமால் முஹம்மது பிலால், செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் A.K. காஜா நஜீமுதீன் D.Litt.(USA), பொருளாளர் ஹாஜி M.J. ஜமால் முஹம்மது, உதவி செயலர் டாக்டர் K. அப்துஸ் சமது, உறுப்பினர் & மதிப்புறு இயக்குநர் டாக்டர் K.N. அப்துல் காதர் நிஹால் மற்றும் முன்னாள் மாணவர் சங்க ஜித்தா கிளை ஹாஜி. ரஹ்மத்துல்லாஹ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக, விழாக்குழுத் துணைத்தலைவரும் காட்சித் தொடர்பியல் துறைத் தலைவருமான திரு. K.சண்முக வேலாயுதம் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் S. இஸ்மாயில் முகைதீன் தலைமையுரை ஆற்றினார். நபிவழியில் சாதி சமய பேதமற்ற ஒற்றுமையான உலகத்தை உருவாக்குவோம் என்று அவர் வலியுறுத்தினார்.

விழாப் பேருரை வழங்கிய பேராசிரியர். மு.அப்துல் சமது அவர்கள் நபிகள் நாயகத்தின் பன்முக ஆளுமை இன்றைய சமுதாயத்துக்கும் இளைஞர்களுக்கும் முன் மாதிரியாக அமைந்திருப்பதை விளக்கினார். என்னைப் போல் வாழுங்கள்' என்று சொல்லும் தகுதி நபிகள் நாயகத்துக்கு மட்டுமே இருந்தது. வாழ்க்கையின் அடிப்படை உணவு உடை மற்றும் உறையுள் என்று மூன்றைத்தான் குறிப்பிடுவர். ஆனால், அற்றுடன் நான்காவதாகச் சொந்த வாகனத்தையும் நபிகள் நாயகம் குறிப்பிட்டார்கள். அது சமுதாயம் நவீன வாழ்வை நோக்கி நகர்வதற்கான திட்டத்தின் அடிப்படையாக அமைந்தது எனலாம். பரிபூரணமான இறை நம்பிக்கையுடன் முயற்சியும் வேண்டும் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. எனவேதான், ஒட்டகத்தை கட்டிப்போடு. இறைவன் மீது நம்பிக்கை வை என்று நபிகள் நாயகம் சொன்னார்கள்.

மாணவர்கள் வலிகளை விரும்பித் தாங்க வேண்டும். அதுவே வளர்ச்சிக்கு வழி கோலும் என்பது நபிகள் நாயகத்தின் வாழ்க்கை தரும் செய்தி. இளைஞர்கள் சிறு சிறு பிரச்சனைகளுக்கெல்லாம் தற்கொலை செய்துகொள்வது மிகவும் வேதனைக்குரியது. நபிகள் நாயகம் தற்கொலையைத் தடை செய்தார்கள் என்பதையும் தற்கொலை செய்வோர் சொர்க்கத்தின் வாடையைக் நுகரமாட்டார்கள் என்று சொன்னதையும் நாம் சிந்தையில் நிறுத்த கூட வேண்டும். இது போன்ற பல பொன்னான கருத்துக்களை அவர் எடுத்துரைத்தார்.

பேருரைக்குப் பின்னர் தீனியாத் & அறக்கல்வித் துறைகள் சார்பில் நடத்தப்பட்ட போட்டித் தேர்வு மற்றும் கட்டுரைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அரபித் துறைத்தலைவர் முனைவர் M.அப்துல் காதர் மற்றும் வேதியியல் துறைப் பேராசிரியர் முனைவர் M.புருசோத்தமன், பேராசிரியைகள் J.பாத்திமா பௌஜியா, Dr. S.ராஜேஸ்வரி, ஒருங்கிணைப்பாளர்கள். தீனியாத் & அறக்கல்வித் துறை (பெண்கள் பிரிவு) ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். Dr. K.N. முகமது பாஜில், இயக்குநர் விடுதி நிர்வாகம், செல்வி. J.ஹாஜிரா பாத்திமா, இயக்குநர், பெண்கள் விடுதி, கல்லூரி நிதி ஆளுநர், தேர்வு நெறியாளர், கலை மற்றும் அறிவியல்புல முதன்மையர்கள், துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர். இறுதியாக, விழாக் குழுவின் செயலாளர் முனைவர் என்.முசாபர்கனி நன்றியுரை ஆற்றினார்.









### திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

# அரபு தமிழ் இலக்கியங்கள் கருத்தரங்கம்






திருச்சி ஜமால் முகமகது கல்லூரியின் தமிழாய்வுத்துறை, அரபுத் துறை, இஸ்லாமிய பண்பாட்டு மையம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக சமூகவியல் துறை, சென்னை புதுக்கல்லூரியின் தமிழாய்வுத்துறை, திருநெல்வேலி சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி வரலாற்றுத்துறை, காயல் பட்டினம் வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி ஆகியவை இணைந்து அரபுத் தமிழ் இலக்கியங்கள் எனும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கை திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடத்தின.

கருத்தரங்கில் ஆய்வு மலரை வெளியிட்டு அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தரன் பேசியது: பெண் கல்வியை போற்றும் விதமாகவும், உயர்கல்வியை உறுதி செய்து இன்றைய பெண் சமூகம் நாளைய தமிழகத்தை தாங்கும் அறிவியல் வல்லுநர்களாகவும், மருத்துவராகவும், பொறியாளரா கவும், படைப்பியலாளராகவும், உயர்கல்வி கற்ற பெண்களாகவும் தொழில்நுட்பம் நிறைந்த உழைக்கும் சமூகத்தை சார்ந்தவராகவும் உருவாக தமிழக அரசின் புதுமைப் பெண் திட்டம் அடித்தளமாக அமைந்துள்ளது. இத்திட்டத்தில் மாதம் ரூ. ஆயிரம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் பெண்கள் கல்வி கற்க இத்தகைய உதவித் தொகை வழங்கப்படுவதில்லை. உலகிற்கே முன் உதாரணமாக தமிழகம் விளங்குகிறது. அனைத்து துறைகளிலும் தமிழகம் 'முதலிடத்தில்' இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலும்,சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, பெண்களை பொருளாதார ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் உயர்த்துதல் என்ற குறிக்கோளுடன் செயல்படுவதே திராவிட மாடல் ஆட்சி என்றார் அவர்.

நிகழ்ச்சியில், கல்லூரிச் செயலர் அ.கா. காஜா நஜிமுதீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால்முகமது, உதவிச் செயலர் க. அப்துஸ் சமது, கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், தமிழாய்வுத்து றைத் தலைவர் அ. சையத் ஜாகீர்ஹசன், கருத்தரங்க அமைப்புச் செயலர் கா. முகமது இஸ்மாயில் மற்றும் பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.








HOD / CO-ORDINATORS MEETING
at 10.30 a.m. on 03.03.2023 in the Hussainudeen Hall

# 32ND ACADEMIC COUNCIL MEETING

AT 9.30 A.M. ON 18.03.2023 IN THE COMMERCE GALLERY









PG & Research Department of Mathematics, Jamal Mohamed College, Tiruchirappalli organized the JAMATICS – 2023 on 01.03.2023




8th SOUTH INDIA LEVEL INTER-COLLEGIATE FOOTBALL TOURNAMENT FOR THE
JAMAL MOHAMED TROPHY
at 4.30 p.m. on 07th to 09.03.2023 in the College Ground



HELPING HEARTS ASSOCIATION & ANTI DOWRY ASSOCIATION Jointly organizedMADATH – 2K23
(A Special Meet for Special Childrens)
at 9.30 a.m. on 11.03.2023 in the Khajamian Hostel Auditorium




11th DIAMOND JUBILEE VOLLEYBALL TOURNAMENT
FOR THE
IOB ROLLING TROPHY
at 10.30 a.m. on 04.03.2023 in the College Ground



Winners in Ramakrishna mission vidyalaya Sister Nivedita Trophy State Level Kabaddi tournament held at Coimbatore for 3 &4th of March 2023

ஜமாலியன் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்

**ஆசிரியர்**
முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன்
M.Sc., M.Phil., PGDCA., Ph.D.,
கல்லூரி முதல்வர்

**செய்தி ஆசிரியர்**
முனைவர். A.R. முஹம்மத் ஷாநவாஸ்
M.Sc.,PGDCA.,M.Ed.,M.Phil.,Ph.D.,

**இணை ஆசிரியர்கள்**
K. சண்முக வேலாயுதம் M.A., M.Phil.,SET.,
R. ராஜேஷ்குமார் M.A., M.Phil.

**ஆசிரியர் குழு**
உதவிப் பேராசிரியர்கள், காட்சித் தொடர்பியல் துறை
B. ராமகிருஷ்ணன் M.F.A.,M.Phil.,
முனைவர் S. ரகுநாதன் M.A., PGDAPR., MA., Ph.D.,
D. பிரதீபன் M.Sc., SET.,
G. பரணீதரன் M.Sc.,
H. முஹம்மத் பயாஸ் M.Sc.,
மாணவர்கள், காட்சித் தொடர்பியல் துறை
V. சிவகுமார், A. முகமது அய்மன்

**நிருபர்கள்**
K. காவியச்செல்வன், R. வெற்றி செல்வன்,
P. பிரபு மணிகண்டன், T.M. கரண்

**ஒளிப்படக் கலைஞர்கள்**
K. அரவிந்த் குமார், J. டென்சில் டொமினிக்,
S. அருண்குமார், R.பாலசுப்ரமணியன்

**தொடர்புக்கு**
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020

காட்சித் தொடர்பியல் துறையின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துக்கள், படைப்புகள், மற்றும் துறை செய்திகளை எங்களுக்கு அனுப்பவும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**
துறைத்தலைவர்
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 620 020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

'ஜமாலியன் டைம்ஸ்' மாத இதழுக்கு தொடர்ந்து ஆதரவளித்து வரும் மக்கள் குரலுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன்ஸ் சார்பாக அச்சிடுவோர்
மக்கள் குரல் நடுநிலை நாளேடு TRINITY MIRROR

**துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகளுக்கு ஒரு வேண்டுகோள்**

ஜமாலியன் டைம்ஸ் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது உங்கள் கருத்துக்களை தமிழில் எழுதி கடிதம் மூலமாகவோ அல்லது ஈ-மெயில் மூலமாகவோ அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,
ஜமாலியன் டைம்ஸ்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620020
jmcviscom@gmail.com

## கல்லூரி நாள் விழா 2023 (ஆண்கள் பிரிவு)






திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியின் (ஆண்கள் பிரிவு) கல்லூரி நாள் விழா 2023, 15-03-2023 காலை 10.00 மணியளவில், கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. சென்னை அண்ணா பல்கலைக்கழகம், பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் மேலாண்மை மையத்தைச் சார்ந்த பேராசிரியர் (Emeritus Professor), மேனாள் மாணவர் முனைவர் அ.ராமச்சந்திரன் இவ்விழாவின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று விழா சிறப்புரையாற்றி மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். அவர் தம் உரையில் தனது கல்லூரி கால நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார். கல்லூரியின் நிறுவனர்களான ஜமால் முகமது சாகிப் மற்றும் காஜாமியான் இராவுத்தர் ஆகியோரின் கொடையின் காரணமாகவே தன்னைப்போன்ற கிராமங்களைச் சார்ந்த மாணவர்கள் உயர்கல்வி கற்றனர். மேலும், சமூக நல்லிணக்கத்தையும், சமத்துவத்தையும் ஜமால் முகமது கல்லூரியின் மூலமாகவே தான் கற்றுக்கொண்டதாகவும் கூறினார். தற்காலத்திய அறிவியல் முன்னேற்றம் மற்றும் அதன் அவசியத்தைப் பற்றி மாணவர்களிடையே விளக்கினார். மாணவர்கள் தங்கள் இலக்கை நிர்ணயித்து அதனை அடைய தொடர்ச்சியாக உழைக்க வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், ஜமால் முகமது கல்லூரியில் கணினி அறிவியல் துறையுடன் இணைந்து இயந்திர அறிவியல் (Department of Machine Learning) துறையைத் துவங்க வலியுறுத்தினார். அதற்காகத் தன்னுடைய ஒத்துழைப்பை நல்குவதாகவும் உறுதியளித்தார்.

முன்னதாக, கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், வரவேற்புரையாற்றி, 2022-23 ஆம் கல்வியாண்டின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

கல்லூரிச் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர். A.K. காஜா நஜிமுதீன், பொருளாளர் ஹாஜி M.J. ஜமால் முகமது, உதவிச் செயலர் முனைவர் K. அப்துஸ் சமது, துணை முதல்வர் முனைவர் A. முகமது இப்ராஹிம், நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குனர் முனைவர் K.N. அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குனர் முனைவர் K.N. முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குனர் செல்வி. J. ஹாஜிரா பாத்திமா, நிதி ஆளுநர் D.I. ஜார்ஜ் அமலரெத்தினம், கலைப்புல முதன்மையர் முனைவர் கரிமுல்லா பாஷா, அறிவியல்புல முதன்மையர் முனைவர் கவுஸ் பாஷா, தேர்வு நெறியாளர் முனைவர் சையது ஜாகிர் ஹஸன், மேனாள் முதல்வர்கள், மேனாள் பேராசிரியர்கள், மேனாள் மாணவர்கள், கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

பல்கலைக்கழக அளவில் பதக்கங்களை வென்ற மாணவர்கள், கல்லூரியில் பணியாற்றி 25 ஆண்டுகள் பணி நிறைவுபெற்ற பேராசிரியர்கள் & அலுவலகப் பணியாளர்கள் மற்றும் இவ்வாண்டு பணி ஓய்வுபெறும் பேராசிரியர்கள் & அலுவலகப் பணியாளர்களும் கல்லூரி நிர்வாகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். இறுதியாக, கல்லூரியின் கூடுதல் துணை முதல்வர் முனைவர். M. முகமது சிஹாபுதீன் நன்றியுரையாற்றினார்.

## கல்லூரி நாள் விழா 2023 (பெண்கள் பிரிவு)






திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரியின் (பெண்கள் பிரிவு) கல்லூரி நாள் விழா 2023, 16-03-2023 மதியம் 03.00 மணியளவில், கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்தியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள ஆரிஃபா கல்விக் குழுமங்களின் நிறுவனத் தலைவர் திரு. எம்.சுல்தானுல் ஆரிஃபீன் இவ்விழாவின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று விழா சிறப்புரையாற்றி மாணவிகளுக்குப் பரிசுகளை வழங்கினார்.

அவர் தம் உரையில் குமரகுருபரரின் கருத்துக்களை முன்வைத்து அவைதனில் உண்மையைக் கூற வேண்டும். தேவையற்ற கருத்துக்களைத் தவிர்க்க வேண்டும். சிலரின் வார்த்தைகளை வார்த்தைகளாக எடுத்துக்கொள்ளாமல் வகுப்பறைச் சொற்களாக எடுத்துக்கொள்ள வேண்டும். பெண்களின் பலம் சிறப்பானது. கல்வியறிவு, வீரம், ஆளுமைமிக்கவர்களாகப் பெண்கள் திகழ வேண்டும். வீட்டை அழகாக்கும் பெண்களால் நாட்டையும் அழகாக்க முடியும். கல்வியை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுப்பது சிறந்த தர்மம் என்றும் வாழ்க்கைக்கு நாணயம் எவ்வளவு முக்கியமோ அதைப்போல நா நயமும் முக்கியம் என்பதை உணர்ந்து அதைச் சிறப்பாகச் செய்தவர்கள் நம் கல்லூரியின் நிறுவனர்களாவர். மேலும், இக்கல்லூரியின் மிகப்பெரிய பலம் முன்னாள் மாணவர்கள் என்றார். முன்னதாக, கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், வரவேற்புரையாற்றி, 2022-23 ஆம் கல்வியாண்டின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

கல்லூரிச் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர். A.K. காஜா நஜிமுதீன், பொருளாளர் ஹாஜி M.J. ஜமால் முகமது, உதவிச் செயலர் முனைவர் K. அப்துஸ் சமது, கூடுதல் துணை முதல்வர் முனைவர். M. முகமது சிஹாபுதீன், நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குனர் முனைவர் K.N. அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குனர் முனைவர் K.N. முகமது ஃபாசில், பெண்கள் விடுதி இயக்குனர் செல்வி. J. ஹாஜிரா பாத்திமா, நிதி ஆளுநர் D.I. ஜார்ஜ் அமலரெத்தினம், கலைப்புல முதன்மையர் முனைவர் அ.மெஹறதாப் ஷெரிஃப், அறிவியல்புல முதன்மையர் முனைவர் சை.வஹிதா ஃபாதின், தேர்வு நெறியாளர் முனைவர் சையது ஜாகிர் ஹஸன், மேனாள் முதல்வர்கள், மேனாள் பேராசிரியர்கள், மேனாள் மாணவிகள், கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியர் முனைவர் என். ரீஹானா அவர்கள் சிறந்த இளம்பெண் ஆராய்ச்சியாளர் விருதினைப் பெற்றார். பல்கலைக்கழக அளவில் பதக்கங்களை வென்ற மாணவிகள் கல்லூரி நிர்வாகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். இறுதியாக, கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் A. முகமது இப்ராஹிம் நன்றியுரையாற்றினார்.




## JAMATICS 2023



ஜமால் முகமது கல்லூரி கணிதத் துறை மற்றும் டாக்டர்.ஏ.பி.ஜே அப்துல் கலாம் சங்கம் சார்பாக 01.03.2023 அன்று மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான அறிவுதிறன் சார் போட்டிகள் JAMATICS 2023.

திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி கணிதத் துறை மற்றும் டாக்டர்.ஏ.பி.ஜே அப்துல் கலாம் சங்கம் சார்பாக 01.03.2023 அன்று தேசிய அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான அறிவுதிறன் சார் போட்டிகள் JAMATICS 2023 நடைபெற்றது. Math Quiz, Sudoku, Math Model, Paper Presentation and Math Rangoli முதலிய ஐந்து போட்டிகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் பரிசளிப்பு விழாவிற்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்து தலைமையுரையாற்றினர். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜுமுதீன் அவர்கள் மற்றும் பொருளாளர் ஹாஜி எம். ஜே. ஜமால் முகமது ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை திருச்சி புனித வளனார் கல்லூரி அணிக்கு வழங்கினர். சேலம் பெரியார் பல்கலைக்கழகத்திற்கு இரண்டாவது இடத்திற்கான பரிசு வழங்கப்பட்டது. முனைவர்.எஸ். சேது ராமன், துறைத்தலைவர், கணிதத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அவர்கள் கலந்து கொண்டு நிறைவுரையாறறினார். இவ்விழாவில் பல்வேறு கல்லூரிகளில் இருந்து 246 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜமால் முகமது கல்லூரியின் ரோட்ராக்ட் சங்கம் மற்றும் இளம் அரிமா சங்கம் சார்பில்

## கண் தானம் மற்றும் இரத்த தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி




திருச்சிராப்பள்ளி, ஜமால் முகமது கல்லூரியின் ரோட்ராக்ட் சங்கம் மற்றும் இளம் அரிமா சங்கம் சார்பில், கண் தானம் மற்றும் இரத்த தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 02, மார்ச், 2023 அன்று நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி, உயிர்த்துளி இரத்த வங்கியின் இயக்குனர் டாக்டர் பிரபாகரன் MBBS, MD மற்றும் திருச்சிராப்பள்ளி ஜோசப் கண் மருத்துவமனையின் நிர்வாக அலுவலர் ரோடாரியன் சுபா பிரபு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

டாக்டர் பிரபாகரன் MBBS, MD பேசுகையில், இரத்த தானம் வழங்க தகுதியுடையோர், தகுதியற்றவர், மற்றும் அதனால் நம் உடலில் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கினார். ரோடாரியன் சுபா பிரபு, கண் தானத்தின் அவசியத்தையும், கண்களை பாதுகாக்கும் விதத்தையும் அறிவியல் பூர்வமாக மாணவர்களிடையே விளக்கினார்.

கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே காஜா நஜீமுத்தீன், பொருளாளர் ஹாஜி எம். ஜே. ஜமால் முகமது, துணைச் செயலர் முனைவர் கே.அப்துஸ் சமது, முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முனைவர்.ஏ. முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர். எம். சிகாபுதீன் நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் கௌரவ இயக்குனர் முனைவர் கே. என். அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குனர் முனைவர் கே.என். முகமது பாசில், பெண்கள் விடுதி இயக்குனர் திருமதி .ஜெ .ஹாஜிரா பாத்திமா, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கல்லூரியின் ரோட்ராக்ட் சங்க ஆலோசகர் முனைவர், J. முகமது ஜியாவுதீன் அனைவரையும் வரவேற்றார். இளம் அரிமா சங்க பிரதிநிதி நன்றியுரையாற்றினார். இளம் அரிமா சங்க ஆலோசகர் முனைவர் கே. முகமது ரஃபி, இயற்பியல் துறை தலைவர் ஜமால் முகமது ஜாஃபர், முன்னாள் மாணவர் அப்துல் ரஹீம் மற்றும் ரோட்ராக்ட் மற்றும் இளம் அரிமா சங்கத்தைச் சார்ந்த 100 மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்புடன் கூடிய

# மாணவர் வட்டியில்லாக் கடன் திட்டம்

## தனது ஒரு மாத ஊதியத்தை இத்திட்டத்திற்கு வழங்கி கல்லூரி நிர்வாகத்தை பாராட்டிய அமைச்சர்



திருச்சிராப்பள்ளி, ஜமால் முகமது கல்லூரியின் முதுகலைத் தமிழாய்வுத்துறை, இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம், முதுகலை அரபுத்துறை; திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை; சென்னை, புதுக்கல்லூரியின் தமிழாய்வுத்துறை; திருநெல்வேலி, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியின் வரலாற்றுத்துறை மற்றும் காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி இணைந்து 14.03.2023 அன்று அரபுத் தமிழ் இலக்கியங்கள் எனும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கத்தை ஜமால் முகமது கல்லூரியில் நடத்தினர். இக்கருத்தரங்கில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், மாண்புமிகு செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் கலந்துகொண்டு கருத்தரங்கச் சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில், ஜமால் முகமது கல்லூரியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களில் முத்தாய்ப்பான திட்டம் தான் முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்புடன் கூடிய “மாணவர் வட்டியில்லாக் கடன் திட்டம்”. இத்திட்டம் கல்லூரியில் சிறப்பாகச் செயல்பட்டு வருவது கண்டு, இத்திட்டத்தில் என்னுடைய பங்களிப்பும் இருக்க வேண்டுமென்று எண்ணி, என்னுடைய சட்டமன்ற உறுப்பினரின் ஒரு மாத ஊதியத்தை இத்திட்டத்திற்கு வழங்குகிறேன் என்று கருத்தரங்க மேடையிலேயே அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக 20.03.2023 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் கல்லூரி நிர்வாகத்தை அழைத்து தன்னுடைய ஒரு மாத ஊதியமான ரூ.1,05,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம்) – க்கான காசோலையை கல்லூரியின் செயலர் டாக்டர் அ.கா. காஜா நஜீமுதீன், உதவிச் செயலர் முனைவர் க.அப்துஸ் சமது, முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், ஆகியோரிடம் வழங்கினார். முதுகலைத் தமிழாய்வுத்துறையின் இணைப்பேராசிரியரும், இஸ்லாமிய தமிழ்ப் பண்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளருமான திரு கா.முகமது இஸ்மாயில், உதவிப் பேராசிரியர் முனைவர் க.சிராஜுதீன் ஆகியோர் உடன் இருந்தனர். இத்திட்டம் மாணவச் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும்என்பதற்காகவேதன்னுடைய சட்டமன்ற உறுப்பினருக்கான ஒரு மாத ஊதியத்தை வழங்குவதாக தெரிவித்துள்ளது வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். காசோலையைப் பெற்றுக் கொண்ட கல்லூரி நிர்வாகத்தினர், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி நவின்றனர்.

JMC STAFF ASSOCIATION

## ANNUAL GET-TOGETHER & FELICITATION TO RETIRING STAFF MEMBERS











வேதியியல் துறை பெண்கள் பிரிவு சார்பில்

## மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையேயான வேதியியல் போட்டி




திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி, வேதியியல் துறை பெண்கள் பிரிவு சார்பில் மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையேயான வேதியியல் போட்டி 01.03.2023 புதன் அன்று நடைபெற்றது.

துவக்க விழாவில் வேதியியல் துறை உதவிப் பேராசிரியை முனைவர் பி. ஆரிஃபா பர்சானா வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரியின் கூடுதல் துணை முதல்வரும், துறைத் தலைவருமான முனைவர் எம். சிஹாபுதீன் அவர்கள் தலைமையுரையாற்றினார். அதனைத் தொடர்ந்து உதவிப் பேராசிரியரும் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளருமான முனைவர் ஏ. முஷிரா பானு அவர்கள் போட்டியின் கருப்பொருளை முன்மொழிந்தார்.

பல்வேறு கல்லூரிகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட மாணவிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை சிறப்பித்தனர். இந்நிகழ்வானது மாணவிகளின் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தவும், வேதியியல் துறையில் புதுமையான சிந்தனைகளை ஆராய்வதற்கான தளத்தினை உருவாக்கவும் வழி வகுத்தது.

நிறைவு விழாவில், வேதியியல் துறை சுயநிதி பிரிவு பொறுப்பாளர் முனைவர் என். முசாபர்கனி வரவேற்புரை வழங்கினார். துணை முதல்வர் முனைவர் ஏ. முஹம்மது இப்ராஹீம் அவர்கள் தலைமையுரையாற்றினார். கல்லூரியின் பொருளாளர் ஹாஜி. M.J. ஜமால் முஹம்மது, அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். வேதியியல் துறை உதவிப் பேராசிரியை முனைவர் கே. மஹமூதா பர்வின், நிகழ்ச்சியின் அறிக்கையை சமர்பிக்க, அதனைத் தொடர்ந்து, வேதியியல் துறை உதவிப்பேராசிரியர், முனைவர் ஏ. அஸ்ரார் அஹமது, நன்றியுரை வழங்கினார். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியாக ஒட்டுமொத்த போட்டிகளுக்கான வெற்றிக் கோப்பையை, திருச்சிராப்பள்ளி தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பெற்றது. வெற்றி பெற்ற மாணவிகளை கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ. காஜா நஜூமுத்தீன், துணைச் செயலாளர் முனைவர் கே. அப்துல் சமது, முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் நிர்வாகக்குழு உறுப்பினர் மற்றம் கௌரவ இயக்குனர் முனைவர் கே .என் .அப்துல் காதர் நிஹால்,விடுதி இயக்குனர் முனைவர் கே. என் முகமது பாசில், பெண்கள் விடுதி இயக்குனர் திருமதி ஜெ. ஹாஜிரா பாத்திமா ஆகியோர் பாராட்டிச் சிறப்பித்தனர்.

# STUDENTS' CORNER

DEPARTMENT OF VISUAL COMMUNICATION

## HERITAGE TOUR THANJAVUR (01.03.2023)







